# யாழ் மாவட்டப் பாடசாலை அனைத்தும் டிச. 22-ம் திகதி வரை நடைபெறப் பணிப்பு

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவும் டிசம்பர் மாதம் 22-ம்திகதிவரை தொடர்ந்து நடைபெறும் என யாழ் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். மூன்றாம் தவணை விடுமுறைக்காக டிசம்பர் 23-ம் திகதி முதல் ஜனவரி முதலாம் திகதிவரையும் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும். ஜனவரி இரண்டாம் திகதி முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும். 1990-ம் ஆண்டிற்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் யாவும் பாடசாலைகளினால் கொத்தணி அதிபரின் மேற்பார்வையுடனும் கோட்டக் கல்விப்பணிமனை உதவிப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடனும் ஜனவரி 21 முதல் நடாத்தப்படல் வேண்டும். இக்கால எல்லைக்குள் வரும் ஞாயிற்றுக்கிழமைகளும், பொது விடுமுறைகளும் தவிர்ந்த ஏனைய நாட்கள் யாவும் பாடசாலை நாட்களாகக் கருதப்படும். வகுப்பேற்றப் பரிட்சைகளுக்குத்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 267 புதன் 07-11-1990 (ஐப்பசி 21) ற. ஆகிர் 18

# போதனா வைத்தியசாலையை செஞ்சிலுவை பொறுப்பேற்றது

## சூழவுள்ள 200 — 500 மீற்றர் பகுதிகள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கம் நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டது. இதனையடுத்து இவ்வைத்தியசாலையைச் சூழவுள்ள சிலகுறிப்பிட்ட பகுதிகள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியைச் சுற்றி 200 மீற்றர் முதல் 500 மீற்றர் வரையிலான பகுதிகளே பாதுகாப்புவலயமாகப் பிரகடனபபடுத்தப்பட்டுள்ளன.

இதன் படி மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து புல்லுக்குளம் றீகல் தியேட்டர் பழைய மீன் சந்தை கஸ்தூரியர் வீதி, வின்சர் தியேட்டர் சந்தி, ஸ்ரான்லி வீதி வெலிங்டன் தியேட்டர் வரை சென்று குறுக்கே கன்னாதிட்டி, பலாலி வீதி-பருத்தித்துறை வீதிச் சந்தி, ஆரியகுளம் ஊடாக மீண்டும் ஸ்ரான்லி வீதி, ஸ்ரேசன்வீதி, மாட்டீன் வீதி. ஆஸ்பத்திரி வீதி, 3 ஆம் குறுக்குத் தெரு, வேம்படி மகளிர் கல்லூரி பின் புறமாக மணிக்கூட்டு கோபுரம் வரையுமே இந்தப் பாதுகாப்பு வலயம் செஞ்சிலுவைச் சங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாப்பு வலய

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி இயங்குவதற்கான நிபந்தனைகள்

கடந்த நான்கு மாதகாலமாக மூடப்பட்டிருந்த யாழ் போதனா வைத்தியசாலையை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றது குறித்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

★ ஆஸ்பத்திரி வளவிற்குள் செஞ்சிலுவைச்சங்க வாகனங்களையும் ஆஸ்பத்திரி வாகனங்களையும் மட்டுமே நிறுத்திவைக்க முடியும்.

★ நோயாளர்களைக் கொண்டு வரும் வாகனங்கள் நோயாளிகளை ஒப்படைத்ததும் உடனடியாகவே ஆஸ்பத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து தெல்லிப்பழையை நோக்கி 2 ஷெல்கள் ஏவப்பட்டன.

அவற்றில் ஒன்று தெல்லிப்பழை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள மா. பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டின் அருகே விழுந்து வெடித்ததால் வீடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## குளமங்கால் மயானம் மீது இரவு பொம்மர்த் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு மல்லாகம் குளமங்கால் பகுதியில் உள்ள மயானம் ஒன்றின் மீது பொம்மர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இங்கு சடலம் ஒன்று எரிந்து கொண்டிருந்ததையடுத்தே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இம்மயானத்துக்கு அருகில் உள்ள இ. கந்தசாமி என்பவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஜே. வி. பி. வங்கிகளை தாக்கும்?

ஜே. வி. பி இயக்கத்தின் தாக்குதல்களுக்கெதிராக விழிப்பாக இருக்குமாறு தென்பகுதி வங்கிகளை பொலிஸ்மா அதிபர் ஏணெஸ்ட் பெரேரா எச்சரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது அண்மையில் தலுகம கம்பஹா வங்கிகள் ஜே. வி. பி. ஆல் தாக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை என்று ஊகிக்கப்படுகிறது.

## விரைவில் அமைதி ஏற்படுத்தப்படும்

இன்னும் மூன்று மாதங்களில் நாட்டில் அமைதி ஏற்படுத்தப்படும் எனப் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா வந்திருந்த அமைச்சர் அங்கு ராணுவ அதிகாரிகளிடையே பேசுகையிலேயே இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

## தொண்டமனாறு நோக்கி ஷெல் வீச்சு

நேற்று மாலை 4-15-ல் இருந்து 5-30 மணிவரை பலாலியில் இருந்து தொண்டமனாறை நோக்கி ஆட்லறி ஷெல் வீசப்பட்டது. சேத விபரம் இதுவரை தெரியவில்லை, (ப-17)

## வீரமரணம்

நேற்று முன்தினம் காலை 9. 30 மணியளவில் கீரிமலை வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் சினைப்பர் தாக்குதலுக்கு வீரவேங்கை செல்வன் (ஜெகந்தன், ஜெயகாந்) 3-ம் குறிச்சி பொத்துவில் வீரமரணமடைந்தார். (ப-10)

## வவுச்சர்கள் இங்கு வந்தும் இன்னும் பணம் வந்து சேரவில்லை

செப்டம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் அவற்றிற்கான கட்டுநிதி அனுப்பப்படவில்லை என யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் இவ்வவுச்சர்கள் இன்னும் ஒய்வூதியக்காரர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தற்பொழுது தங்கியிருக்கும் அரச அதிபர் இதுபற்றி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனவும் விரைவில் கட்டுநிதி கிடைக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## தமிழோசை சங்கரமூர்த்தியின் யாழ் விஜயம் கடைசிநேரம் ரத்து

லண்டன் பி. பி. ஸி தமிழோசைத் தயாரிப்பாளர் சங்கர்-சங்கரமூர்த்தி தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு சென்னைதிரும்பியுள்ளார்.

கடந்த 3-ம் திகதிகொழும்பு வந்திருந்த இவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருந்த போதிலும் அது முடியாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழோசைப் பணியில் தலைமைத் தயாரிப்பாளராகவும், துணை நிகழ்ச்சி மேலாளராகவும் இருக்கும் "சங்கரண்ணா" 1991-ல் தனது 60-வது வயதில் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதி கடற்பகுதியில் கடற்படைப் பீரங்கித் தாக்குதல்

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு கடற்பிராந்தியத்தில் ரோந்து புரியும் கடற்படைப் படகுகளிலிருந்து பீரங்கித்தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன.

கடந்த ஞாயிறு இரவு நயினாதீவிலிருந்து குறிகாட்டுவான் பகுதிக்கு நடாத்தப்பட்ட இத்தாக்குதலால் சில வீடுகளின் சுவர்கள் பாதிப்படைந்தன முப்பதுக்குப் மேற்பட்ட தாக்குதல் இடம்பெற்றது.

புங்குடுதீவு 4ஆம் வட்டாரம், இறுப்பிட்டி, பெருக்கடி, பெருங்காடு ஆகிய பகுதிகளிலும் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன. (20)

## பற்றைக் காடுகளையும் வியாபாரிகள் விட்டபாடாயில்லை

யாழ் மாவட்டத்தில் நிலவி வரும் விறகுப் பற்றாக்குறையைப் போக்க, சைக்கிள்களில் பெருமளவு விறகு தினமும் கொண்டுவரப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள சிறுகாடுகளில் காய்ந்த மரங்களைத்துண்டு துண்டாக வெட்டிப் பலரும் சைக்கிள்களில் பின் பகுதியில் கட்டிக் கொண்டுவந்து விற்பனை செய்து வருகின்றனர்.

முன்னர் கூலித் தொழிலில் ஈடுபட்டிருந்தவரும் தற்போது தொழிலின்மையால்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பி. பி. ஸி. பொன்விழா இசைவிருந்து

லண்டன் பி பி. ஸி. உலக சேவை நிலையம் இம் மாதம் 24ம் திகதி வரலாற்றில் முதல்

—04 ஆம் பக்கம் பார்க்க

போர் மூண்டதும் மின்சாரத் துண்டிப்பு. ஜென ரேற்றர் மூலம் சுழற்சி முறை விநியோகம். மின் நிலையத்தின் மீது குண்டுவீச்சுத் தாக்குதல். மீண்டும் நீர்மின்சாரம். மின்மாற்றி ஒயில் திருட்டால் கைக்கெட்டியும் வாய்க் கெட்டாத நிலை. திரும்பவும் துண்டிப்பு. இப்படிக் கண்ணாமூச்சி விளையாடுகிறது மின்சாரம்.

தஷிணா மூர்த்திகளாக - தெற்கு நோக்கி -கண்கள் பூத்துப் போய் இருக்கும் நம்முன், ஆக்க பூர்வமான ஒரு சிந்தனையை வைக்கிறார் இந்த விஞ்ஞான ஆசிரியை.

# எமது மின்சாரத் தேவை

-- கோகிலா மகேந்திரன்

"பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட, மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது'' என்பது ஒரு சீனப் பழமொழி.

இன்று எமக்கு மின்சாரம் இல்லை. ''எமக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும்?'' என்று தென்னிலங்கையைப் பார்த்து ஏங்கி நிற்கிறோம் நாம்.

சுழற்சிமுறை மின்சாரந்தான் எமக்கு ஒரு சில தினங்களில் கிடைத்து விட்டாலும், நிரந்தர மின்சாரம் வரத் தேவையான திருத்த வேலைகள் முடியக் குறைந்தது ஒன்றரை வருட காலம் ஆகும் என்ற செய்தி எம்மைத் துணுக்குற வைக்கிறது.

''மின்சாரம் வருவதற்கு முன் இந்த நாட்டில் நாங்கள் வாழவில்லையா?'' என்றொரு கேள்வி இருக்கத்தான் செய்கிறது அப்படியானால் ''விவசாயம் செய்வதற்கு முந்திய காலத்தில் மனிதன் வாழவில்லையா?'' என்றும் ஒரு கேள்வி இருக்கிறது. நாகரிக வளர்ச்சி என்பது முன்னே சென்றுகொண்டிருப்பது. உலகம் மிக உயரத்திற்குச் சென்றுவிட்ட வேளையில், நாங்கள் மின்சாரம்கூட இல்லாமல் 'வாழ்வதென்பது, ஏதோ ஒரு வகையில் எமது வளர்ச்சியைத் தடை செய்யும்.

'Think, believe, visualize , success' என்று சொல்வதுண்டு.

எண்ணுதல், நம்புதல், மனக்கண்ணில் செய்து பார்த்தல், வெற்றியடைதல்! ஆம். நாம் தொடர்ந்து எமது தேவைகள் எல்லாவற்றுக்கும் தெற்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பது எமக்குத் தெளிவாகி விட்டது. எமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய நாம் ஒரு முனைப்பான போராட்டம் ஆரம்பிக்க வேண்டியுள்ள நேரத்தில் பயிர்ச்செய்கைக்கு மிகஅவசியமான மின்சாரத்தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாதா என்ற கேள்வியை நாம் மனத்தில் எழுப்ப வேண்டும்.

முடியும்!

சிந்தனையும் நம்பிக்கையுமே செயலின் ஆரம்பம்.

வடக்குக்-கிழக்குப் பகுதியில் நீர் வீழ்ச்சி எதுவும் கிடையாது. எமது மண்ணின் கீழே எரிபொருள் வளம் இல்லை. நாம் எப்படி மின் உற்பத்தி பற்றிச் சிந்திப்பது என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது ''வாழ்வில் ஒரு கதவு மூடிக்கொண்டால் இன்னொன்று திறந்து கொள்ளும்'' என்று சொல்வார்கள். இவை இரண்டும் இல்லை என்றால்... வேறு வழிமுறைகள் பற்றிச் சிந்திப்போமே!

அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டில் காற்றிலிருந்து மின்சாரம் பெறுவதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திறந்த வெளிகளுக்கும் வேகமாக வீசும் காற்றுக்கும் எமது மண்ணிலும் குறை இல்லை. பெரிய வெளிகளில் உயர்ந்து நிற்கும், உருக்குத் தூண்களின் உச்சியில் மின் விசிறி போன்ற மூன்று சுழலும் பட்டைகளை இணைத்து, அவற்றின் சுழற்சியில் இருந்து மின்னைப் பெறலாம். இவை 'Wind turbines' என அழைக்கப்படும். காற்று இலவசமாகக் கிடைக்கும்மூலப் பொருள் மட்டுமல்ல; எப்போதும் கிடைப்பதும்கூட.

'Wind turbines' அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் காற்று மிக வேகமாக வீசும் இடங்களாகும். இத்தகைய இடங்கள் எவை என்பதைக் கண்டறிவதற்கு 'Data logger' என்ற கருவியைப் பயன்படுத்துகிறார்கள். இக்கருவிகளின் துணைகொண்டு (அல்லது சாதாரண காற்று வேகமானிகளின் துணைகொண்டு) முதலில் ஒரு Wind Atlas தயாரிக்கப்பட வேண்டும். நீர் மின் நிலையம், எரிபொருள் மின் நிலையம் ஆகியவற்றோடு ஒப்பிடுகையில் காற்று மின் நிலையங்களை விரைவில் நிறுவிவிட முடியும். அமைப்புத் திட்டம் முடிவடைந்து விட்டால், ஆறு மாதங்களில் மின் நிலையத்தை அமைத்து விடலாம்.

இவற்றைப் பராமரிப்பதற்குரிய செலவும் குறைவென்று கூறப்படுகிறது இந்த மின் நிலையங்கள் சூழலையும் மாசுபடுத்துவதில்லை காற்று மின் நிலையம் சற்று அதிகமான இடத்தை அடைத்துக்கொள்ளும் என்பது மட்டும்தான் பிரச்சினை. ஆனால், அந்த இடம் வல்லைவெளி போன்ற, பயிர்ச் செய்கைக்கு உதவாத இடம் என்றால் நாம் அது பற்றியும் அக்கறைகொள்ளத் தேவையில்லை. காற்று மின் நிலையம் செயற்பட, காற்றின் வேகம் மணிக்கு 12Km—18Km ஆக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

காற்றுச் சுழலி (Wind Turbines) இன் சுழல் பட்டைகள் கண்ணாடி நாரினால் வலுவேற்றப்பட்ட பொலியெஸ்டரால் செய்யப்படுகின்றன. பட்டைகள் கிடையாகச் சுழலுமாறும் அமைக்கப்படலாம், நிலைக்குத்தாகச் சுழலுமாறும் அமைக்கப்படலாம்.

மின் உற்பத்திக்கு நாம் பயன்படுத்தக்கூடிய இன்னொரு மூலப்பொருள்- மீதேன் வாயு, தாவர விலங்குக் கழிவுகளில் இருந்து இந்த வாயுவை உற்பத்தி செய்து, ஒவ்வொரு தனி வீட்டிலும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று நாங்கள் முன்னர் சிந்தித்திருக்கிறோம். பொருட் காட்சிகளில் பார்த்துமிருக்கிறோம். இது பரவலாக நடைமுறைக்கு வரவேண்டும்.

எமது மண்ணுக்கு எப்போதும் தாராளமாகக் கிடைக்கும் சூரிய ஒளிச் சக்தியையும் நாங்கள் மின் சக்தியாக மாற்றலாம். இந்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி எமது மண்ணின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைப்பாகச் சிந்தித்துப் பொது மக்களுக்கு வழி காட்டவேண்டும்.

Sooner or later, the man who wins is the man who thinks he can! ஆகவே, நம்பிக்கை கொள்வோம்; வெற்றி பெறுவோம்!

### 500 மில்லியன் அமெரிக்க டாலரின் நிலை?

# தமிழ்ப் பகுதி அபிவிருத்திக்கு

# ஜனாதிபதி புதிய நிபந்தனை!

வடக்கு கிழக்கில் சமாதானம் நிலவினால் மட்டுமே இனிமேல் அங்கு அபிவிருத்தி மேற்கொள்ளப்படுமாம்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாச நேற்று முன்தினம் வவுனியாவில் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு என பல் நாடுகள் பெருமளவு பணத்தை வழங்கியுள்ளன. இதற்கென 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்டுள்ளன.

எனினும் வடக்கு கிழக்கில் அமைதி நிலவினால் மட்டுமே அப்பகுதிகளில் அபிவிருத்திக்கு அப்பணம் பயன்படுத்தப்படுமெனவும் ஜனாதிபதி நிபந்தனை விதித்திருக்கிறார்.

## ஐஸ் தொழிற்சாலை இயங்காததால் 50 தொழிலாளர் வேலையிழப்பு

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஐஸ் தொழிற்சாலை ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர்.

இப்பகுதியில் மூன்று மாதங்களாக இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததையடுத்து ஐஸ் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. இதனால் இங்கு பணிபுரியும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சமயாசமய ஊழியர்கள் வேலையையிழந்த நிலையில் பரிதவிக்கின்றனர். (38)

### களஞ்சியப் பொறுப்பாளர்களுக்கு அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ சங்கங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பால்மா வகைகளை உடனடியாக எடுக்கும்படி களஞ்சியப் பொறுப்பாளர் பணிக்கிறார்.


## சிறு விளம்பரம்

### கல்வி

G.C.E.(O/L -ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 24 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் தனிப்பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கைவலதுபக்கம், 5 ம் வீடு சுண்டுக்குளி. 11037

### சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11024

### மணமகள் தேவை

அவுஸ்திரேலியாவிலுள்ள வேளாள றோமன் கத்தோலிக்க 38 வயதுடைய மணமகனுக்கு படித்த ஆங்கில அறிவுடைய அழகுள்ள மணமகள் தேவை. அவுஸ்திரேலியாவில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்ப முகவரி மே/பா முரசொலி விளம்பர இல.73. 11041

### இடமாற்றம்

சந்தை தெற்கு வீதியில் இயங்கி வந்த செல்வம் ஆட்ஸ் தற்பொழுது சுன்னாகம் நூல் நிலையம் அருகாமையில் கே. கே. எஸ். வீதியில் இயங்கி வருகிறது. றபர் சீல், விளம்பர போட் செய்து கொடுக்கப்படும். 11042

### விற்பனைக்கு

எம்மிடம் பலவிதமான திருமண அழைப்புக் காட்டுகள், புதுமனைப் பிரவேசக் காட்டுகள், பிறந்ததின அழைப்புக் காட்டுகள் மற்றும் சகல பாடசாலை உபகரணங்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம். 327, நாவலர் றோட் (நாவலர் ஹோலுக்கு முன்பாக) நிர்வாகி: மு. சந்திரசேகரம் 11045

## அறிவித்தல்

மீண்டும் பழைய இடத்தில் நாம் எமது சேவையை ஆரம்பித்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

### "மொறாயஸ்"

(கண்ணாடி வழங்குபவர்களும், (பல் கட்டுபவர்களும்)

50, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(வெலிங்டன்தியேட்டர் முன்பாக)

11044


## 31-ம் நாள் நினைவாக



### திருமதி சிதம்பரப்பிள்ளை சொர்ணரத்தினம்

மண்ணுலகில்: 21-08-1926 | விண்ணுலகில்: 07-10-1990

என்னென் றுரைப்பேன் என்னம்மா
இன்றும் கனவோ கனவேதான்
மின்னல் போன்று இவ்வாழ்வில்
மின்னி மறைந்தீர் கணப்பொழுதில்
செல்வ மெல்லாம் நீரேயாய்
சிறந்து மிளிர்ந்தீர் என்வாழ்வில்
கண்ணை இமைதான் காப்பதுபோல்
கணமும் பிரியா தெனைக்காத்தீர்
கண்ணே கண்ணின் மணியாகி
கவலை தெரியா வாழ்வளித்தீர்
என்ன இதற்கு இணையாக
ஈண்டு செய்யும் கைமாறோ
கூட்டை விட்டுப் பிரிந்துநின்று
கொண்டு விட்டீர் சிவபதமே
தேறும் வகைகள் தெரியாது
தியங்கி நின்று தவிக்கின்றேன்
ஆறும் வகைகள் உண்டென்றால்
இறைவா எனக்கு உரைத்துவிடு.

தாவடி,
7-11-19

மகன், மருமகள்
பேரப்பிள்ளைகள்.

11001

# சிறிய செய்திகள்

## லலித் டாக்டராகிறார்

கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி விரைவில் டாக்டராகிறார்.

இவருடன் நீதியமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் விரைவில் டாக்டராகவுள்ளார்.

இவர்கள் இருவருக்கும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் இந்த 'டாக்டர்' கௌரவப் பட்டத்தினை வழங்கவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழா இம்மாதம் 17--ம் திகதி நடைபெறவுள்ளது.

இவர்களுடன் முன்னாள் இராஜதந்திரி நெவில் கருணாரத்தினவுக்கும் டாக்டர் பட்டம் கிடைக்கவுள்ளது.

## சன்மார்க்க சபை உதவி

கடந்த ஆனி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் உயிரிழந்த மற்றும் காயமடைந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்குப் கிராம சேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்நூறு ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை உடனடி நிவாரணமாக குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் வழங்கினர்.

சன்மார்க்க சபையின் மேற்கு ஜேர்மனிப் பிரதிநிதி சேகரித்து அனுப்பிவைத்த நிதியிலிருந்து இவ் உதவிப் பொருட்களை சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை விநியோகித்தார்.

இதுவரை இவ் உதவிகளைப் பெற்றுக்கொள்ளாத குரும்பசிட்டியைச் சேர்ந்த உயிரிழந்த, காயமடைந்தவர்களின் குடும்பத்தினர் சபைத் தலைவர் கலாகேசரி அ. தம்பித்துரையை சந்திக்குமாறு கோரப்படுகின்றது.

## 'ஆராதனா' 10 லட்சம் வசூல்

12 வருட இடைவெளியின் பின்னர் முதல் தடவையாக கொழும்பில் திரையிடப்பட்ட ஹிந்திப் படமொன்று முதல் மூன்று மாத காலத்தில் மட்டும் பத்துலட்சம் ரூபா வசூலைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது.

ஹிந்திப்படங்களைத் திரையிட விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதன் பின்னர் கொழும்பில் 'ஆராதனா' ஹிந்திப்படம் தற்பொழுது திரையிடப்பட்டுள்ளது.

ராஜேஸ்கன்னா, சர்மிலா தாகூர் நடித்துள்ள இத்திரைப்படம் 12 வருடங்களுக்கு முன்னர் திரையிடப்பட்ட போது பெரும் வசூலை பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலப் படங்கள் பெறும் வசூலைவிட கொழும்பில் திரையிடப்படும் ஹிந்திப் படங்கள் பெரும் வசூலைப் பெற்றுக் கொடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## 5 மாதங்களாக அலுவலகங்கள் இல்லை

மாங்குளத்தில் இராணுவ நடவடிக்கையால் ஐந்து மாதங்களாக அரச திணைக்களங்கள் செயலிழந்துள்ளன.

இப்பகுதியில் முக்கிய அலுவலகங்கள் மற்றும் வங்கிகள் செயல்படாததால் இப்பகுதி மக்கள் தமக்குரிய சம்பளக் காசோலைகளை மாற்றமுடியாமலும் வைப்பிலிட்ட பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் பரிதவிக்கின்றனர். (38)

## உணவுப்பொருள் களஞ்சியத்தில் சேமிப்பு

துணுக்காய்- பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மழை காலத்தை யடுத்து உணவுகள் வைப்பிலிடப்பட்டு வருகின்றன.

அப்பகுதியில் இலவச உணவு வழங்கும் நடவடிக்கையாகப் பனங்காமம், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உணவுக் களஞ்சியங்களில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதத்திற்கான உணவுப் பொருட்கள் லொறிகள் மூலம் காட்டுப்பாதையூடாக வவுனியா, அனுராதபுரம் சென்று எடுத்து வந்து வைப்பிலிடப்படுகின்றன.

இதற்கான நடவடிக்கைகளைப் பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சுந்தரன் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். (38)

## சம்பளப் பத்திரம் கைவசம் இல்லை

யாழ் கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய சம்பளப் பத்திரம் போதியளவு கையிருப்பில் இல்லாமலுள்ளதாக அறியப்படுகிறது.

இதனால் வெளி மாவட்டங்களில் இருந்து இதனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நிதிக்கிளை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-17)

## முல்லை. தபாற்சேவை சீரடைகிறது

முல்லைத்தீவில் தபால் சேவை ஓரளவு சீரடைந்து வருகிறது. முல்லைத்தீவு மாங்குளம் தபாலகங்களைத் தவிர மற்றைய தபாலகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

கொழும்பிலிருந்து வந்த தபாற் பொதிகளும் பட்டுவாடா செய்யப்பட்டன. கொழும்புக்கும் இப்பகுதி தபாற்பொதிகள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தபாலகங்களில் போதியளவு முத்திரைகள் கையிருப்பில் இல்லை.

தபால் அத்தியட்சகர் அலுவலகம் தற்காலிகமாக புதுக்குடியிருப்பில் இயங்குகிறது தபால் சேவை சீரடைந்து வரும் வேளையில் தபால் உத்தியோகத்தர்கள் வரவு இன்னமும் சீரடையவில்லை. (38)

## யூரியா கொண்டுவர முயல்கையில்....

வலிகாமம் மேற்குப் பகுதியைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச்சொந்தமான லொறி 25 மூடை யூரியா உரத்துடன் வவுனியா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த லொறியின் சாரதியும் கடுமையாகத் தாக்கப்பட்டதாக அறிய வருகின்றது (23)

## தீவுப்பகுதியில் நிவாரணம் தாமதம்

தீவுப்பகுதி மக்களுக்கு 3- கட்ட நிவாரணம்இன்னும் வழங்கப்படவில்லை. இதற்கான பொருட்கள் உரிய ப. நோ. கூ. சங்கங்களுக்கு வந்துள்ள போதிலும், விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளனர். ப-12

தொடர் — 07

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

— 'அரவிந்தன்'

### சாட்டி மாதாகோயிலில்...

மக்கள் அங்கு சென்று தங்கப்பயந்து உடுத்த உடுப்புக்களுடன் சாட்டிமாதா கோயிலில் அடைக்கலம் புகுந்தனர். மக்களிற் சிலர் நாரந்தனைத் தேவாலயத்தில் தங்கினர். அவ்விடத்தில் பொம்மர் குண்டுவீச்சு நிகழ்ந்ததால் அங்கிருந்து அகன்று சுருவிலுக்குச் சென்றனர். சாட்டி மாதா கோயிலில் முப்பதாயிரம் மக்கள் வரையில் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

இராணுவம் கண்ணில் கண்ட மக்களைச் சுட்டுக்கொன்றும், வெட்டிச்சரித்துக் கொண்டும் முன்னேறி வருகின்றது என்ற வதந்தியும் ஓரளவு உண்மையும், விச ஜுரமாகப் பரவியதால் மண்கும்பானுக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்தோடினர். சாட்டிமாதா கோயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகத் தங்கியிருந்த போது, ஹெலி சுட்டதில் ஆறுபேர் வரையில் அவ்விடத்தில் பலியாக நேர்ந்தது. அதனால் இயலுமானவர்கள் பலர் இரவோடிரவாக வள்ளங்களில் ஏறி அராலித்துறையூடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர்.

### வேலணையில் குண்டுவீச்சு

25-ம் திகதி பொம்மர்கள் தீவுப்பகுதிக் கட்டிடங்களை அழிப்பதில் ஈடுபட்டன. வேலணைத் தீவிலிருந்த சொற்ப கட்டிடங்களும் விமானக் குண்டுவீச்சினால் தரைமட்டமாகின. மண்கும்பான் பிள்ளையார் கோயில் தாக்கப்பட்டுச் சேதமடைந்தது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பிரதேசங்களில் நிகழ்ந்த இராணுவ அட்டூழியங்களை வணக்கத்திற்குரிய பிதா சந்திரபோஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:

### அல்லைப்பிட்டி அனுபவம்

''... 24-ம் திகதி வெள்ளிக்கிழமை இராணுவம் மண்கும்பான் வந்தடைந்தது. அல்லைப்பிட்டி பிலிப் நேரியர் தேவாலயத்தில் 7000 பேர் வரையில் தஞ்சமடைந்தார்கள். மறுநாள் இராணுவத்தைச் சந்திக்கப்போகிறோம் என்ற பயம் மக்கள் மனதில் இருந்தது. 25-ம் திகதி இராணுவம் மண்கும்பானிலிருந்து அல்லைப்பிட்டி நோக்கி நகரத் தொடங்கியது. நாங்கள் இரவோடிரவாக ஆலயத்திலும், முக்கியமான சந்திலும் வெள்ளைக்கொடிகளைக் கட்டியிருந்தோம். இராணுவம் அங்கு வந்தபோது நானும் அருட் சகோதரன் அந்தோனிப்பிள்ளையும் வாசலில் கைகளை உயர்த்தியபடி நின்றோம். வேறு சில பெரியவர்களும் நின்றனர். இராணுவம் பயங்கரமாகச் ஷெல் அடித்துக்கொண்டும், சுட்டுக் கொண்டும் வந்தது. மரண பயத்துடன் முன்னே சென்றோம். எங்களைத் தூரத்தில் கண்ட இராணுவவீரன் ஒவருன் கை அசைத்துக் கீழே இருக்கும்படி பணித்தான். நாங்கள் கைகளை உயர்த்தியபடி கீழே இருந்தோம். இராணுவம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. மக்கள் அனைவரும் அழுதபடி நின்றிருந்தனர். என்னை எழுந்திருக்கும்படி ஒரு இராணுவ அதிகாரி கேட்டார். நான் எழுந்திருந்தேன் '' ஏன் இவர்கள் இங்கு இருக்கிறார்கள்? என அதிகாரி கேட்டார். நான் ஹெலியிலிருந்து போடப்பட்ட துண்டுப்பிரசுரத்தினைக் காட்டினேன். இதன் பிரகாரம் மக்கள் அகதிகளாக ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றேன். அங்கு தங்கியிருந்தோரில் ஆண்கள் மூன்று பிரிவுகளாக இருக்கும்படி இராணுவம் பணித்தது. 18 வயதிற்குட்பட்டோர் 18 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டோர், 40 வயதிற்கு மேற்பட்டோர் என மூன்று பிரிவுகளாக வகுத்தனர். பின்னர் 14 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டோரை அழைத்துக்கொண்டு இராணுவம் மண்டைதீவுக்கு முன்னேறியது. கூட்டிச்சென்ற ஆண்களின் பெற்றார் தலையில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர். என்னுடன் இருந்த அருட் சகோதரர்களையும் கூட்டிச்சென்றனர். பின்னர் ஒருவரைத்திருப்பி அனுப்பி விட்டனர். என் முன்னிலையில் சிலர் தாக்கப்பட்டனர். மண்கும்பானிலிருந்து வரும் வழியில் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிந்தேன். அல்லைப்பிட்டியில் இளநீர்பறித்துக் கொடுத்த ஒருவரை அந்த கத்தியால் வெட்டிக்கொன்றதாக இறந்தவரின் தந்தை என்னிடம் முறையிட்டழுதார். கூட்டிச்செல்லப்பட்ட இளைஞர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர். அன்று மாலை கூட்டிச்செல்லப்பட்டவர்களில் 25 பேர் வரையில் விடுதலை செய்யப்பட்டனர். மாலை 3. 30 மணிக்கு தேவாலத்திற்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்தோரில் மேலும் சிலரை தம்முடன் அழைத்துச்சென்றனர் மாலை 6. 30 மணிபோல ஒரு இராணுவ அதிகாரி சில அரிசி மூடைகளையும் பருப்பு, ரின்பால் முதலியவற்றையும் கொண்டு வந்து தந்தார். அவற்றினை அங்குள்ள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும்படி.

### பனம்பழம்

''... விடுவிக்கப்படாத பிள்ளைகள், கணவன்மார் ஆகியோரை நினைத்துப் பெண்கள் ஓயாது அழுதனர். உணவு போதியளவில் கிடைக்கவில்லை. பனம் பழத்தைத் தின்று பசியாற முயன்றனர். ஊரடங்கு இருந்ததால் மக்கள் வெளியில் செல்ல முடியவில்லை. பசி பொறுக்க முடியாததால் ஞாயிறு காலை உடைந்திருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்த அரிசி, கவ்பீ, மிளகாய் என்பனவற்றினை எடுத்து மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தோம். ஞாயிறு காலை பிடித்துச்செல்லப்பட்டவர்களில 60 பேர் விடுவிக்கப்பட்டனர் ஞாயிறு இரவு பயங்கரமாகவிருந்தது. அகதிகளைச் சுற்றியுள்ள வீடுகளில் இராணுவத்தினர் தங்கியிருந்தனர். மாலை 6. 30 மணிக்கு மேல் யாராவது வெளியில் வந்தால் சுடப்படுவர் என இராணுவத்தினர் எச்சரித்திருந்தனர். அன்றிரவு மழை பெய்தது. அகதிகளில் முக்கால் பங்கினர் தேவாலயத்தினுள் இடம் கிடையாது வெளியில் தங்கியிருந்தனர். பெண்கள், குழந்தைகள் ஆகியோரைக் கோயிலுக்குள் இருக்க விட்டுவிட்டு ஆண்கள் எல்லாரும் மழையில் நின்றார்கள்.

### மண்டைதீவிலிருந்து வந்த மக்கள்

''... 27 ஆந்திகதி மண்டைதீவுக்கு இராணுவம் சென்றது. அங்கிருந்த மக்கள் அகதிகளாக அல்லைப்பிட்டிப்பக்கம் ஓடிவந்தார்கள். சுமார் 3000 பேர் வரையில் எனது தேவாலயத்திற்கு வந்தனர். அவர்களைத் தங்க வைக்க இடம் இன்மையால் அருகில் இருந்த புனித யுவானியர் ஆலயத்தில் அவர்களைத் தங்க வைத்தேன்.

### வெளியேற்றமும், தீவைப்பும்

''... 27-ம் திகதி இராணுவ அதிகாரி ஒருவர் ஜீப்பில் வந்தார். ''இங்கிருக்கும் அனைவரும் ஒரு மைலுக்கு அப்பால் சென்று தங்குங்கள்'' எனக்கட்டளையிட்டார் நாங்கள் அனைவரும் அல்லைப்பிட்டியைவிட்டு மண்கும்பானைச் சென்றடைந்தோம். பெண்களும் குழந்தைகளும் மிகச் சிரமப்பட்டே அவ்விடத்திற்கு வந்தனர். களைப்பு, பசி அவர்கள் மிகவும் சோர்ந்த நிலையில் வழிநடந்தனர். ''எங்களை ஒரு குண்டு போட்டு அழித்துவிடுங்கள்'' எனச் சில வயோதிபர் வாய்விட்டுக் கூறிக் கலங்கினர். நாங்கள் அல்லைப்பிட்டியை விட்டு வெளியேறியதும் இராணுவம் வீடுகளைக் கொழுத்தியது. பொருட்களைக் கொள்ளையடித்தது.''

### மண்டைதீவுப் பிரவேசம்

மண்டைதீவை அடைவதில் பலத்த சிரமங்களை ஸ்ரீலங்கா இராணுவம் எதிர்நோக்கியது. மிதிவெடிகளும், நிலக்கண்ணிகளும் அவர்களுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தின. புலிகளின் பலத்த எதிர்ப்பினையும் சமாளிக்க நேர்ந்தது. எனினும் இராணுவத்தினர் மூர்க்கமாக மண்டைதீவிற்குள் புகுந்தனர். வடபுறமான பாதையூடாகவும், தென்புறமான கடற்கரையூடாகவும், மத்திய பரவையூடாகவும் இராணுவம் மண்டைதீவிற்குள் சுட்டுக்கொண்டு புகுந்தது, மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த கப்பல்கள் பீரங்கிகளைக் கக்க, விமானங்கள் குண்டுகளைப் பொழிய இராணுவம் மண்டைதீவிற்குள் பிரவேசித்தது. மண்டைதீவு மக்கள் பொறிக்குள் அகப்பட்ட நிலையினராயினர். பண்ணைத் தாம்போதியூடாகவோ, வள்ளங்கள் மூலமாக குருநகர், பாசையூருக்கோ செல்லமுடியாதவாறு வியூகத்தினுள் அகப்பட்டுக் கொண்டனர். சின்னத் தீவிற்கு அப்பால் நின்றிருந்த கடற்படைக் கப்பல் உமிழ்ந்துகொண்டிருந்த பீரங்கிகள், யாழ்ப்பாணப் பரவைக் கடலை வள்ளங்களால் கடக்க இடமளிக்கவில்லை. கோட்டைப் பக்கமிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பண்ணைத் தாம்போதியில் கால்வைக்கவிடவில்லை.

(வளரும்)

## உலக அரங்கில்

### சந்திரசேகருக்கு ராஜீவ் ஆதரவு

வி. பி. சிங்கின் ஜனதாதளில் இருந்து பிரிந்து சென்ற சந்திரசேகரின் போட்டிக்குழுவை ஆட்சியில் அமர்த்த ஆதரவு வழங்கப்போவதாக இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இது பற்றி அறிவித்த இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியிடம் பொதுத்தேர்தல் எப்போது? என செய்தியாளர்கள் கேட்டபோது, ஏன் அமையப்போகும் புதிய அரசு 4 ஆண்டுகளுக்கு இருக்கக்கூடாதா என்றார் ராஜீவ். 1979 இல் சரண்சிங் பிரதமராகி விரைவில் பதவி கவிழ்ந்தது போன்று ஏதும் சந்திரசேகருக்கு ஏற்படாது என ராஜீவ் காந்தி சூசகமாகக் கூறினார்.

இதேவேளை நேற்று சந்திரசேகர் ஜனாதிபதி வெங்கட்ராமனை சந்தித்துப்பேசினார். பேச்சுகளின் போது தாம் அமைச்சரவை அமைப்பது குறித்து ஏதும் பேசவில்லை எனப் பின்னர் சந்திரசேகர் கூறினார்.

இதனிடையே பிரதமர் வி. பி. சிங் வெளியேற்றிய 25 எம். பிக்கள் இன்று நடைபெறும் நம்பிக்கைத் தீர்மான வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாது என சபாநாயகர் நேற்று அறிவித்துள்ளார். சபாநாயகரின் இந்த அறிவிப்புக்கு சந்திரசேகர் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை வி. பி. சிங் தலைமையில் ஜனதாதள் கட்சியினர் இன்று எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று இரவு கூடி ஆராய்ந்தனர்.

இந்தளவில் இன்று காலை பதினொருமணிக்கு இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது.

### இராணுவ அரசின் மனித உரிமைமீறல்

பர்மிய ராணுவ அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதாக ஏசியாலோச் எனும் மனித உரிமைகள் கழகம் ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது. பர்மாவில் கடந்த ஒருவருடத்தில் மட்டும் சித்திரவதைகள், காணாமற்போவோர் என பலசம்பவங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற கட்சியினருக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்க இன்னமும் ராணுவ அரசு மறுத்து வருகிறது. பஸ்களிலும், வீடுகளிலும், கடைகளிலும் என கைது செய்யப்படுபவர்களின் சித்திரவதைகளின் பின்னர் கொல்லப்படுகின்றனர். சித்திரவதைகளுக்கென 19 முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சித்திரவதை செய்வது பற்றி இங்கு படைகளுக்கு பயிற்சியும் வழங்கப்படுகிறது. கண்ணாடிதூள்களின் மேல் நடக்கவிடல், இரும்பு உருளைகளைஉடல்மேல்உருட்டல், தலைகீழாக கட்டித் தொங்கவிடல் என பலமுறைகளில் சித்திரவதை செய்யப்படுகிறது என இந்த மனித உரிமைக்கழகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### பாகிஸ்தான் பிரதமராக நவாப்ஷெரீப்

பாகிஸ்தானின் 17-ம் பிரதமராக நவாப்ஷெரீப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானில் ஜனநாயகத்தை உருவாக்குவதே தமது கடமையாகும் என நவாப்ஷெரீப் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பாகிஸ்தானில் ராணுவ நீதிமன்றங்கள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும், தன்மீது சுமந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை புதிய அரசு நீக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித்தலைவி பெனாஸீர் பூட்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

---

சட்டத்தரணிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

# காணாமற்போனவரை ஆராய ஓர் ஆணைக்குழு நியமிக்கவும்

1983 ஜனவரி முதல் இலங்கையில் காணாமற் போனவர்கள் குறித்து ஆராய்வதற்கு ஓர் ஆணைக்குழுவை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி பிரேமதாஸவைக் கோரவுள்ளது.

இது தொடர்பான சாட்சிகளை அழைக்கவும், விசாரணை செய்யவும், சிபார்சுகளைச் செய்யவும் அதிகாரம் படைத்த சுதந்திரமான ஆணைக்குழுவாக இது அமையும் எனத் தெரிகிறது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற இச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்கள், தமது சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இச் சங்கத்தின் மனித உரிமைகள் குழுவின் தலைவர் டீ. டபிள்யூ. அபேயக்கோன் தெரிவித்தார்.

ஆட் கொணர்வு மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதே தாம் தற்போது செய்யக் கூடியது எனவும் அவர் சொன்னார்.

காணாமற்போனவர்களைக் கைது செய்தவர்களின் அடையாளங்களை நிரூபிப்பது சுலபமல்ல என்றும் இந்த நடைமுறை காலதாமதத்தை உண்டுபண்ணும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

இதனால்தான் ஒருமாற்று வழியாக ஒரு சுதந்திர முழு அதிகாரம் படைத்த ஆணைக்குழு நியமிக்கும் படி தாம் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 1987 முதல் சுமார் 60 ஆயிரம் பேர் காணாமற்போனதாகவும், கண்டியில் தற்போது வாராவாரம் 20 பேருக்கு மேல் காணாமற் போகும் பட்டியலில் சேர்க்கப்படுவதாகவும் அண்மையில் இலங்கை வந்த மனித உரிமைகள் குழு தெரிவித்தது.

# இணுவிலில் ஞாயிறு இரவு ஆயுத முனையிற் கொள்ளை

இணுவில் பாலாவோடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதம் தாங்கிய சிலர் இங்குள்ள வீரசிங்கம் என்பவரின் வீட்டில் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டைச் சோதனையிடுவதாகக் கூறி வீட்டின் உள்ளே நுழைந்த இவர்கள் அங்கு நின்ற சிறுபிள்ளையின் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

இதன் பின் வீட்டில் தங்கியுள்ள அகதிகளிடமிருந்து 2000 ரூபாவையும் பறித்துச் சென்றனர். வீட்டிற்கு வெளியே காவல் இருந்த இருவர் அவ்வழியில் வந்த இளைஞனை மறித்து வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 10)

### மோதல்

நேற்று முன்தினம் மாலை ஊர்காவற்றுறை நகர்ப் பகுதியில் தங்கியிருந்த ராணுவத்தினர் ஊறணி நோக்கி செல்ல முயன்ற போது விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தினர். சேத விபரங்கள் தெரியவில்லை.

### சிவாஜி கணேசன் தேறிவருகிறார்

சிங்கப்பூர் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தேறிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் நடைபெற்ற திரைப்பட நிகழ்ச்சி ஒன்றில் மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை இவர் திடீரென மயங்கி வீழ்ந்ததாகவும் உடனே இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இராமநாதன் நுண்கலைப்பிரிவு விரிவுரைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவு விரிவுரைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இவ் விரிவுரைகள் மருதனார் மடத்திலுள்ள நுண்கலைப் பிரிவுக் கட்டிடத்தில் நடைபெறுவதாக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் அறியத்தருகிறார்.

### வேலைக்கு வரவும்

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வேலை செய்யும் சகல ஊழியர்களும் தத்தமது காரியாலயங்களுக்கு உடனடியாகச் சமுகந் தரும்படி பிரதான பொறியியலாளர் அறிவித்துள்ளார். (71)

# மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதி மக்கள் தபால்களைப் பெற யாழ்ப்பாணம் அலைகிறார்கள்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் மண்டைதீவு, அல்லைப்பிட்டி உபதபாலகங்கள் செயற்படாததால் இப்பகுதி மக்கள் தமது தபால்களைப் பெற முடியாமல் பெரும் கஷ்டநிலைக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் தமக்குரிய தபால்களை யாழ் பிரதம தபாலகத்திற்குச் சென்று பெற்று வருகின்றனர்.

இதனால் இப்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு அராலித் துறையூடாகச் சென்றுபெருங் கஷ்டத்தின் மத்தியில் தபால்களைப் பெற்று வருகின்றனர்.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மண்டைதீவு, அல்லைப்பிட்டித் தபால்களை அங்கேயே பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கேட்கின்றனர். (33)

### காலமானார்

### திருமதி பழனித்துரை கனகம்மா

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் இராசா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பழனித்துரை கனகம்மா 06-11-90 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் கசலஞ்சென்ற பழனித்துரையின் அன்பு மனைவியும், கனகசபாபதி, அம்பிகாபதி சிவலிங்கம், பகவதி, முத்துலிங்கம், கனகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோகிலாதேவி, இராசாம்மா, நித்தியலக்சுமி, ஸ்ரீபன், லோகேஸ்வரி, லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். இவரது ஈமக்கிரியைகள் 07-11-90 புதன்கிழமை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று (செம்பாடு கொலனி) மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

இராசபாதை வீதி, க. பகவதி.

11046

### குளமங்கால்...

ரின் வீடும் வைரவர் கோயிலும் சேதமடைந்தன.

சிவப்பிரகாசம் என்பவரின் வீடு முழுமையாகச் சேதமடைந்தது. ஐவர் படுகாயமடைந்தனர்.

சிவப்பிரகாசம் புஷ்பவதிக்கு குண்டுத்தாக்குதல்சத்தத்தால் இருகாதுகளின் செவிப்பறை வெடித்து காது கேட்காமல் போய்விட்டது.

### தெல்லிப்பழையில்—

சேதத்திற்குள்ளானது.

மற்றைய ஷெல் தெல்லிப்பழை அண்ணைமார் கோயிலடியில் விழுந்து வெடித்தது. இதன் சிதறல் ஒன்று துர்க்காபுரம் பஸ்தரிப்பிற்குள் படுத்திருந்த ஒருவரது கண்ணிற் பட்டுக் காயம் ஏற்பட்டது. (ப-10)

### ஆஸ்பத்திரி...

திரி வளவில் இருந்து வெளியேறிவிடவேண்டும்.

★ பாதுகாப்பு வலயத்தினுள் எந்தவொரு அரசியல். இராணுவ அமைப்பும் தரையிலோ வானிலோ நிலையாக நிற்கக்கூடாது.

★ பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து எவரும் தரையிலிருந்தோ வானிலிருந்தோ எந்தட்பகுதியையும் தாக்கக் கூடாது.

★ இராணுவ சீருடையுடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைவதும், வீதியில் கூடி நிற்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நிபந்தனைகள் அமுல் படுத்தப்படாவிடில் ஆஸ்பத்திரியின் பொறுப்பைக் கைவிடுவதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (70,71,ப 11)

### தமிழோசை—

ளார்.

1966-ம் ஆண்டு இவர் தமிழோசையில் அறிவிப்பாளராக சேர்ந்திருந்தார். 1972-ம் ஆண்டு இலங்கை வந்திருந்த போது யாழ் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து அங்கு தமிழோசை அபிமானிகளையும், அறிஞர்களையும் ''சங்கரண்ணா'' சந்தித்திருந்தார்

பி பி ஸியின் 1990 அக்டோபர்—1991 மார்ச் மாதத்திற்குரிய அரையாண்டு வர்ண நிகழ்ச்சிக் குறிப்பு அட்டையில் சங்கரண்ணாவின் யாழ் பல்கலைக்கழக விஜயம் பற்றிய புகைப்படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பற்றை—

விறகுகளை வெட்டி சைக்கிளில் கட்டி வந்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். (50)

### பி. பி. ஸி.

முறையாக இந்தியத் துணைக் கண்டத்தின் ஐந்து முக்கிய நகரங்களிலிருந்து இசைநிகழ்ச்சிகளை - நிகழ்ச்சியினூடே நேரடியாக அஞ்சல் செய்ய உள்ளது.

ஹிந்தி, உர்தூ, வங்காளி, தமிழ், நேபாளி மொழி ஒலிபரப்புக்களில் அன்றையதினம் செய்தியரங்கத்தையடுத்து இந்த இசை நிகழ்ச்சிகள் தொடர் நிகழ்ச்சியாக ஒலிபரப்பில் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கும் மொழிகளில் பி. பி. ஸியில் உள்ள மொழிச் சேவைகளின் 50 வது ஆண்டு தொடக்கத்தையொட்டி இந்தப்பொன் விழாஇசைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

### போதனா ..

எல்லைகளில் உள்ள வீதி மின்கம்பங்களில் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டது.

இதேவேளை யாழ் கோட்டைப் பகுதி இந்தப்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (70, 71)

### யாழ் மாவட்ட...

தோற்றாத மாணவ மாணவியருக்கு எக்காரணம் கொண்டும் வகுப்பேற்றம் செய்யலாகாது.

1990-ம் ஆண்டிற்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் முடிந்ததும் 1991ம் ஆண்டு முதலாம் தவணை வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்படிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கஸ்தூரியார் டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 07-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.